பக்கங்கள்: 06

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2052 | மாசி 15 | சனிக்கிழமை | 27.02.2021 | கதிர் 345

## ‘கொரோனா’விலிருந்து 78,373 பேர் மீண்டார்கள்

### 3,593 பேருக்கு மட்டுமே சிகிச்சை

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் மேலும் 748 பேர் இன்று குணமடைந்து வீடு திரும்பினர்.

இதன்படி இலங்கையில் கொரோனாவின் பிடிக்குள் இருந்து மீண்டவர்களின் 2

## ஜெனிவா நெருக்கடியில்

# இலங்கையை நிர்க்கதியாக இந்தியா கைவிடக் கூடாது!

### வெளிவிவகார அமைச்சின் செயலாளர் லொலம்பகே கொழும்பில் இறைஞ்சல்



கொழும்பு,பெப்ரெவரி 27

“ஜெனிவா நெருக்கடியில் எமது அயல்நாடான இந்தியா,‘அங்குமில்லை, இங்குமில்லை’ என்ற பாணியி பங்கேற்காமைப் போக்கைப் பேணாமல், முழு ஈடுபாட்டுடனும், ஆக்கபூர்வமாகவும் எங்களுக்கு ஒத்துழைத்துச் செயற்படவேண்டும். இலங்கையை நிர்க்கதியாக இந்தியா கைவிட்டு விடக்கூடாது.

- இவ்வாறு இறைஞ்சுகின்றார் இலங்கையின் வெளிவிவகார அமைச்சுச் செயலாளர் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் ஜெயநாத் கொலம்பகே. 2

## இலங்கைக்கு எதிரான பிரேரணை நிச்சயம் தோற்கடிக்கப்பட்டே தீரும்

### அமைச்சர் கெஹலிய நம்பிக்கை



ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மான வரைவு நிச்சயம் தோற்கடிக்கப்படும். அதில் மாற்றுக் கருத்துக்கள் எதுவும் இல்லை.

- இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார் இலங்கை அரசின் அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது அமர்வு 2

## பொலிஸ் சுற்றிவளைப்பில் 3,871 சந்தேக நபர்கள் கைது

### நான்கு மணி நேரத்தில் மட்டும்

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட நான்கு மணி நேர சுற்றிவளைப்பின்போது 3 ஆயிரத்து 871 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும், 6 ஆயிரத்து 173 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் 2

## 26 நாள்களில் 141 பேர் சாவு!

இலங்கையில் கொரோனா வைரஸால் கடந்துள்ள 26 நாள்களில் மாத்திரம் 141 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், கொரோனா வைரஸ் தாக்கத்தின் மூன்றாவது அலையால் கடந்த ஒக்டோபர் 4ஆம் திகதி முதல் நேற்று வரை 451 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன. 2

## புதிய அரசமைப்பு வரைவு இப்போதைக்கு இல்லை!

புதிய அரசமைப்புக்கான ஆரம்பக்கட்ட வரைவு நகல் அடுத்த மாதம் வெளிவரும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தாலும், எதிர்வரும் ஜூன் மாதத்துக்குப் பின்னரே அது வெளிவரும் என்று நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.


புதிய அரசமைப்புக்கான யோசனைகள் அடங்கிய வரைவுநகலை முன்வைப்பதற்காக அரசால் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமையில் 9 பேரடங்கிய நிபுணர்கள் குழுவொன்று அமைக்கப்பட்டது. 2

## சுன்னாகத்தில் சிறுவர் விளையாட்டால் தன்பாட்டில் தறிகெட்டு ஓடிய டோஸர்!

### வேலிகள், தூண்கள், மரங்களை இடித்துத் தகர்த்தது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,பெப்.27




சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் வீதியோரம் தரித்து நின்ற டோஸர் வாகனத்தில் சிறுவர்கள் ஏறி விளையாடிய சமயம் இயங்கத்தொடங்கிய டோஸர் அருகில் இருந்த வேலிகள், தூண்கள், மரங்களை இடித்துத் தகர்த்தவாறு நகர்ந்து அருகில் இருந்த வீட்டிற்குள் புகுந்தது. 2

# பரபரப்புக்கு மத்தியில் வவுனியாவில் இன்று ஒன்றுகூடியது தமிழரசுக் கட்சி

### ஜெனிவா விவகாரம் உள்ளிட்ட சமகாலப் பிரச்சினைகள் ஆராய்வு







(வவுனியா நிருபர்)

வவுனியா, பெப்.27

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் வவுனியா - குருமன்காட்டில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் இன்று காலை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் நடைபெற்றது.

இதில் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், 2

## புதிய அரசமைப்பு ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறித்த நிபுணர் குழு, அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட அனைத்துத் தரப்பினரிடமும் மின்னஞ்சல் மற்றும் பதிவுத்தபால் மூலம் கருத்துக்களைப் பெற்றுக்கொண்டது. பல தரப்பினரும் யோசனைகளை முன்வைத்திருந்தனர்.

தற்போது அரசியல் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் தொடர்பில் அந்தக் கட்சிகளின் பிரதிநிதிகளுடன், நிபுணர்கள் குழு கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றது. மேலதிக விளக்கங்களைப் பெறுவதுடன், ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றது.

இந்தக் குழு முக்கியமான சில சிவில் அமைப்புக்களையும் நிபுணர்கள் குழுக்களையும் சந்திக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதால், அத்தகைய சந்திப்புக்கள் எல்லாம் நிறைவடைந்த பின்னரே நிபுணர்கள் குழுவால், புதிய அரசமைப்புக்கான ஆரம்பக்கட்ட வரைவு நகல் முன்வைக்கப்படும் என்று அறியமுடிகின்றது.

நிபுணர்கள் குழுவுக்கு ஆறு மாத காலமே அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அந்தக் கால எல்லை மேலும் சில மாதங்களுக்கு நீடிக்கப்படலாம் எனவும், ஜூன் மாதமளவிலேயே ஆரம்ப வரைவு நகல் கையளிக்கப்படும்எனவும்அறியமுடிகின்றது.

அதேவேளை, டிசெம்பர் மாதத்துக்குள் புதியஅரசமைப்பைநிறைவேற்றிக்கொள்வதற்கு அரசு உத்தேசித்துள்ளது.

## 26 நாள்களில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனாவின் முதலாம், இரண்டாம் அலைகளின்போது 13 பேர் மாத்திரமே உயிரிழந்தனர். இதன்படி கொரோனாவால் இதுவரை மொத்தமாக 464 பேர் உயிரிழந்துள்ளனர்.

## பொலிஸ் சுற்றிவளை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கமைய கடந்த 25ஆம் திகதி மாலை 6 மணி தொடக்கம் இரவு 10 மணி வரையான காலப்பகுதியில் 18 ஆயிரத்து 357 பொலிஸ் அதிகாரிகள் இந்தச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது, போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட 1,108 பேரும் துப்பாக்கிகளைவைத்திருந்த 16 பேரும்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அத்தோடு பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 1,430 பேரும், பல்வேறு குற்றங்கள் தொடர்பில் தேடப்பட்டு வந்த 562 பேரும் கைதாகியுள்ளனர்.

குறித்த சோதனை நடவடிக்கையின்போது குடிபோதையில் வாகனம் செலுத்திய607சாரதிகள்உள்ளடங்கலாக போக்குவரத்து விதிகளை மீறியமை தொடர்பில் 6 ஆயிரத்து 173 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன - என்றார்.

## பரபரப்புக்கு மத்தியில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இரா.சாணக்கியன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஈ.சரவணபவன், பா.அரியநேத்திரன், எஸ்.சிவமோகன், ஞா.சிறிநேசன், சாந்தி சிறிஸ்கந்தராஜா, க.துரைரெட்ணசிங்கம், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான ப.சத்தியலிங்கம், கே.சயந்தன், த.குருகுலராஜா, சட்டத்தரணி வி.தவராசா, மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தி.சரவணபவன் மற்றும் கட்சியின் முக்கியஸ்தர்கள் எனப் பலர் பங்கேற்றிருந்தனர்.

ஜெனிவா விவகாரம், தற்போதைய அரசின் புதிய அரசமைப்பு சீர்திருத்தம் மற்றும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் சமகாலப் பிரச்சினைகள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

(100)

## இலங்கைக்கு எதிரான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இலங்கை தொடர்பான விவகாரம் கடந்த 2 நாட்களாக ஆராயப்பட்டிருந்தன. இதில் இலங்கைக்கு ஆதரவாக சுமார் 21 நாடுகள் கருத்துக்களை வெளியிட்டிருந்தன. சில நாடுகள் நடுநிலைப் போக்கை வெளியிட்டிருந்தன. 15 நாடுகள் எதிர்த்திருந்தன.

இந்தநிலையில் இது தொடர்பில் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரைவு நிச்சயம் தோற்கடிக்கப்படும். நட்பு நாடுகள் இலங்கைக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளன. அதிலும் குறிப்பாக சக்தி மிக்க நாடுகள் பிரேரணையைத் தோற்கடிப்பதில் உறுதியாக உள்ளன.

இலங்கையைப் பழிவாங்கும் வகையில் ஒரு சில நாடுகளின் சதித் திட்டங்களுடன் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனாலும், இலங்கை தொடர்பான நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சர் தினேஷ் தெட்டத் தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

இதனைக் கருத்தில் எடுத்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் உறுப்பு நாடுகள் பிரேரணையை நிச்சயம் தோற்கடித்தே தீரும் - என்றார்.

இதேவேளை, இந்தியா, ஜெனிவாவில் வெளிப்படுத்திய நிலைப்பாடு தொடர்பில் இப்போது கருத்து எதனையும் கூறவிரும்பவில்லைஎன்றும்கெஹலிய குறிப்பிட்டார்.

## இலங்கையை நிர்க்கதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொழும்பில் வைத்து இந்தியாவின் 'த ஹிண்டு' நாளிதழுக்கு அளித்த விசேட செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை விடயம் விரைவில் ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் வாக்கெடுப்புக்கு வர இருக்கின்றது. அச்சமயம் எமது உடனடி அயல் தேசமான இந்தியா, எங்களை நிர்க்கதியாகக் கைவிட்டு விடமுடியாது - என்றார் அவர்.

ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் அண்மையில் உரையாற்றிய இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், முழு உலகத்தையும் ஒரு குடும்பம் என்று குறிக்கும் விதத்தில் 'வஸுதைவ குடும்பகம்' என்று தெரிவித்திருந்தார்.

அதைச் சுட்டிக்காட்டிய கொலம்பகே, "உங்கள் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டமைபோல முழு உலகமும் ஒரு குடும்பம் என்றால், நாங்கள் உடனடியாக உங்கள் பக்கத்துக் குடும்பம், அப்படியல்லவா?" எனக் கேள்வி எழுப்பினார்.

"இலங்கைக்கு அருகில் உள்ள அயல் தேசங்களான இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேஷ் எல்லாம் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் அங்கத்துவ நாடுகள். கொவிட் 19 நெருக்கடி, மனிதஉரிமைமீறல்குற்றச்சாட்டுக்கள் என்று அவை எதிர்கொள்ளும் பிரச்சினைகளும் ஒரே மாதிரியானவை. எனவே அவை எல்லாம் ஜெனிவாவில் இலங்கையை ஒன்றுபட்டு நின்று ஆதரிக்க வேண்டும். ஆதரிக்கும் என எதிர்பார்க்கிறோம். எமது பிராந்திய நாடுகள் எம்மை ஆதரிக்கா விட்டால் அது எமக்கு பெரும் அசௌகரியமாகிவிடும்.

"எங்கள் ஜனாதிபதியின் (கோட்டாபய ராஜபக்ஷவின்) ஆதரவு கோரும் முதல் கடிதம் இந்தியப் பிரதமருக்குத்தான் அனுப்பப்பட்டது. இந்த விடயத்தில் இந்தியத் தூதருடன்தான் முதல் சந்திப்பை அவர் மேற்கொண்டார். அதற்கு முக்கிய காரணம் இது விடயத்தில் தென்னாசியாவின் ஐக்கியம் குறித்து நாங்கள் அதிக சிரத்தை கொண்டுள்ளோம்.

"இலங்கை தனது அண்டை நாடுகளின் ஆதரவை அவசியமாகத் தேடி வேண்டி நிற்கின்றது. நாங்கள் விசேடமாக எதையும் கோரவில்லை. இந்தப் பிராந்தியத்தில் எல்லோருடைய (எல்லா நாடுகளினுடைய) பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி ஒரு முகமாக இருக்க வேண்டும் என்ற அயலுறவுக் கொள்கையின் ஆரம்ப அம்சத்தின் அடிப்படையிலான பங்களிப்பையே உரிமையுடன் எதிர்பார்க்கின்றோம்." என்றார் அவர்.

வக்கெடுப்பில் இந்தியா பங்குபற்றாமல் விடுவது, இலங்கைக்கு ஆதரவானதாக அமையுமா என்று கேட்கப்பட்டபோது -

"நாங்கள் இந்தியாவின் முழு ஈடுபாட்டுடனான ஆக்கபூர்வமான பங்களிப்பை எதிர்பார்க்கின்றோம், பங்குபற்றாமல் விடுவதன் மூலமான 'அங்குமில்லை, இங்குமில்லை' என்ற நிலைப்பாட்டையல்ல" - என்றார் அவர்.

மோசமான - இலங்கைக்கு எதிராகக் காட்டமான - பிரேரணை ஒன்றைத் தோற்கடிப்பது சாத்தியமற்றது என்பதை அவர் ஒப்புக் கொள்கின்றார்.

"ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் இரட்டை வேடம் மற்றும் பாசாங்குத்தனமான போக்குக்கு மத்தியில் தென்கோடி நாடு ஒன்று இத்தகைய பிரேரணையை வெற்றி கொள்வது மிகவும் இயலாத காரியம்" - என்றார் அவர்.

"இத்தகைய தீர்மானம் ஒன்றின் பின்னர் வரக்கூடிய பொருளாதாரத் தடை போன்ற தண்டிப்பு நடவடிக்கைகள் நாட்டை விட மக்களையே அதிகம் நெருக்கடியில் ஆழ்த்தும்" என்று குறிப்பிட்ட அவர், நல்லிணக்கம் நாட்டுக்குள், நாட்டு மக்கிளிடையே இருந்து ஏற்பட வேண்டுமே தவிர, வெளியில் இருந்து அதனைத் திணிக்க முடியாது என்ற சாரப்படவும் கருத்து வெளியிட்டார். (உ)

## 'கொரோனா'விலிருந்து ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எண்ணிக்கை 78 ஆயிரத்து 373 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 3 ஆயிரத்து 593 பேருக்குத் தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது.

## சுன்னாகத்தில் சிறுவர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சுன்னாகம் சபாபதிப்பிள்ளை வீதியில் உள்ள ஒரு சிறு வீதியை அமைக்கும் நோக்கில் டோஸர் வாகனம் ஒன்று கடந்த 10 நாள்களாக நிறுத்தப்பட்டிருந்தது. நிறுத்தியிருந்த வாகனத்தில் இன்று மாலை 4 மணியளவில் சிறுவர்கள் சிலர் ஏறி விளையாடியுள்ளனர். இதன்போது திடீரென வாகனம் இயங்கியுள்ளது. இதனால் சிறுவர்கள் வருகை தந்த துவிச்சக்கர வண்டிக்கு மேலால் ஏறியவாறு டோஸர் வீதியால் பயணித்துள்ளது.

டோஸரில் இருந்த நான்கு சிறுவர்களில் ஒருவர் அருகில் தொங்கிய ஆலமர விழுதைப் பற்றிப் பிடித்துத் தொங்கி, டோஸர் முன்நகர்ந்ததும், மர விழுதில் இருந்து இறங்கித் தப்பிக் கொண்டார்.

அதனை நிறுத்த தெரியாத மற்றைய மூன்று சிறுவர்களும் டோஸருக்கு மேலிருந்தபடி அவலக் குரல் எழுப்பிய சமயம் வீதியோரம் ஒரு வீட்டின் தூண் வேலிகளைத் தகர்த்துக் கொண்டு முன்நகர்ந்த டோஸர் வளவில் இருந்த தோட்டத்தின் ஊடாக வேலிகளை பிய்த்துக்கொண்டு தொடர்ந்தும் முன்னேறியது. இதன்போது அந்த வீட்டில் இருந்த சிலர் வீட்டின் முற்றத்தில் இருந்து பதறியடித்து தப்பியோட முயன்றனர்.

தன்பாட்டில் இயங்கிய டோஸர் வீட்டின் வளவில் நின்ற தென்னையுடன் மோதிய சமயம் வீதியால் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் ஓடிவந்து டோஸரில் ஏறி வாகனத்தை நிறுத்தியமையினால் தெய்வாதீனமாக உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டன. இந்த விபத்துக்கள் தொடர்பில் சுன்னாகம் பொலிஸாரிடம் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து டோஸர் உரிமையாளர், காணி உரிமையாளர் மற்றும் டோஸரில்ஏறியசிறுவர்கள்அனைவரும் சுன்னாகம் பொலிஸிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# இந்தியாவை தாஜா செய்யும் கொழும்பு

'வந்தால்தான் தெரியும் தலைவலியும் திருகுவலியும்' என்பார்கள்.

கொழும்பு ஆட்சிப் பீடத்துக்கு இப்போதுதான் தலைவலி வந்திருக்கின்றது. அதன் பின்னர்தான் அது இப்போது துடிக்கின்றது. 'குலப்பன் காய்ச்சல்' அடிப்பது போல நடுங்குவதும் தெரிகின்றது.

சீனா கொடுத்த தைரியத்தில் அண்டை நாடான இந்தியாவைத் தூக்கி எறிந்து நடந்த கோட்டா அரசு, நிலைமையின் விபரீதம் புரியத் தொடங்கியதும் இப்போது இந்தியாவின் காலில் விழவும் தயாராகி நிற்கின்றது.

இதுதான் காலத்தின் கோலம்.

இந்தத் தடவை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஆரம்ப வைபவத்தில் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஆற்றிய உரையின் ஒரு சொல்லாடலை வைத்தே, அதற்குள் ஒளித்து, இந்திய ஆதரவையும் பாதுகாப்பையும் தேட முயற்சிக்கின்றது கொழும்பு.

வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் தமது உரையில் முழு உலகமும் ஒரு குடும்பம் என்பதைக் குறிக்கும் விதத்தில் 'வஸுதைவ குடும்பகம்' என்ற சமஸ்கிருதச் சொல்லாடலைப் பயன்படுத்தினார். மனு ஸ்மிருதியிலும், யக்ஞவல்கிய ஸ்ருதியிலும் உள்ள சுலோகங்களில் வரும் சொற்பதம் இது. பகவத் கீதையிலும் கூட இது உள்ளது.

'பரந்த மனமுடையோருக்கு உலகம் முழுவதும் ஒரே குடும்பம்' என்ற அர்த்தத்தில் மனுவும், யக்ஞவல்கியரும், கிருஷ்ண பரபாத்மாவும் பயன்படுத்திய வார்த்தைகளை அமைச்சர் ஜெய்சங்கர் தமது உரையில் குறிப்பிட, அதைச் சாதகமாகப் பிடித்து வைத்துக் கொண்டு, இந்தக் கடைசிக் கட்டத்தில் இந்திய ஆதரவை வளைத்துப் போடத் தூண்டில் வீசுகின்றார் இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் செயலாளரும், முன்னாள் கடற்படைத் தளபதியுமான அட்மிரல் ஜெயநாத் கொலம்பலே.

"இந்திய வெளிவிவகார அமைச்சர் கூறுகின்றமை போல முழு உலகமும் ஒரு குடும்பம் என்றால், நாங்கள் (இலங்கை) பக்கத்தில், உங்களின் உடனடிக் குடும்பம் அல்லவா?" என்று கேட்கின்றார் அவர்.

"இந்தியா எங்களை நிர்க்கதியாக (கை)விட முடியாது" என்றும் இந்திய நாளிதழ் 'த ஹிண்டு' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியில் அவர் தெரிவித்திருக்கின்றார்.

செய்து கொண்ட சர்வதேச உடன்படிக்கையின் பிரகாரம் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு இறங்குதுறை முனைய அபிவிருத்தித் திட்டத்தை இந்தியாவுக்கு வழங்க வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருந்த போதிலும், அந்தப் பொறுப்பைத் தூக்கிக் கடாசி இந்தியாவை வெளியே விட்ட போதும் –

இந்தியாவின் தென்முனையில் உள்ள இலங்கையின் வடக்குத் தீவுகளில், மின் உற்பத்தித் திட்டங்களை முன்னெடுக்கும் கட்டுமான ஒப்பந்தங்களை இந்தியாவை விட்டு சீனாவிடம் ஒப்படைக்கும் முடிவை எடுத்த போதும் –

இந்தியாவிடம் கையளிக்கப்பட்ட திருகோணமலை எண்ணெய்க் குதங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளை இந்தியா முன்னெடுக்க விடாமல் உள்ளூர் ரீதியில் குடைச்சல்களைக் கொடுத்துக் கொண்டிருந்த போதும் –

தலையில் ஏறாத, 'பக்கத்து நாட்டுக் குடும்பம்' என்ற அறிவு, இப்போது ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலின் தற்போதைய அமர்வில் நெருக்கடி கழுத்துக்கு வந்ததும் கொழும்புக்குப் புரியத் தொடங்கியிருக்கின்றது போலும்.

இலங்கையின் வெளிவிவகாரச் செயலாளர் அட்மிரல் கொலம்பகே 'த ஹிண்டு' நாளிதழுக்கு வலிந்து கொடுத்த பேட்டி இதனைத்தான் உணர்த்துகின்றது.

ஜெனிவா விவகாரத்தில் இந்தியா, "இங்குமில்லை; அங்குமில்லை என்றவாறு விலகி நிற்காமல், ஆக்கபூர்வமாகவும், முழு ஈடுபாட்டுடனும் எங்களுக்குப் பங்களிக்க வேண்டும்" என்று அவர் கூறியிருக்கின்றார்.

"எங்களின் உடனடி அயல்தேசம் எங்கள் பக்கத்தில் இல்லாவிட்டால் எமக்கு அது பெரும் அசௌகரியமாகிவிடும். இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பங்களாதேசம் ஆகிய எமது உடனடி அயல் நாடுகள் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் அங்கத்துவம் பெற்றுள்ளன. அவை எமக்குக் கை கொடுக்கும் என நாம் நம்புகின்றோம்'' என்றும் அவர் விநயத்துடன் குறிப்பிடுகின்றார்.

புதுடில்லியைப் பொறுத்தவரை இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாடு, இறைமை ஆகியவற்றைப் பேணி மதிப்பதாயின் இந்தத் தீவின் சிறுபான்மையினரான தமிழர்களின் நீதி, நியாயமான அபிலாஷைகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்று அது தெட்டத் தெளிவாகக் கூறி விட்டது.

அதனைச் செய்ய மறுக்கும் கொழும்பு, நாங்கள் பக்கத்து வீட்டுக்காரர்கள் என்று உறவு கொண்டாடி இந்தியாவை வளைத்துப் போட முயலுகின்றது. இந்த வாய்ப்பு புதுடில்லியிடம் இனிமேலும் செல்லாது என்பதுதான் உண்மை நிலைமையாகும்.

# வீட்டு வளவுக்குள் மனிதத் தலையை வீசியமை தொடர்பில் மூவர் சிக்கின

## களுவாஞ்சிகுடியில் நடந்த சம்பவம்

மட்டக்களப்பு – களுவாஞ்சிகுடியில் வளவொன்றினுள் மனிதத்தலை வீசப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மனிதத் தலை, மயானத்தில் புதைக்கப்பட்ட சடலத்திலிருந்து திருகி எடுக்கப்பட்டதாக பொலிஸாரின் முதல்கட்ட விசாரணையின் போது கண்டறியப்பட்டுள்ளது.

தலை வீசப்பட்டிருந்த வீட்டின் உரிமையாளரைப் பயமுறுத்தவே மனிதத் தலையை மயானத்தில் புதைக்கப்பட்ட சடலத்தில் இருந்து திருகி எடுத்து வீசியதாக சந்தேக நபர் ஒத்துக் கொண்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை மாலை குறித்த வீட்டு உரிமையாளரின் முன்னால் அமைந்துள்ள வீதியால் மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவர் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டமையுடன் குறித்த வீட்டு உரிமையாளருக்கு மோட்டார் சைக் கிளில் சென்ற நபர்கள் கொலையச் சுறுத்தலும் விடுத்துச் சென்றுள்ளனர்.



அதனைத் தொடர்ந்து வீட்டு உரிமையாளர் களுவாஞ்சிகுடி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

மனிதத் தலை களுவாஞ்சிக்குடிப் பொது மயானத்தில் இருந்து தோண்டி எடுக்கப்பட்டதாகவும் – அதே பகுதியினைச் சேர்ந்த – 83 வயதுடைய – கடந்த டிசெம்பர் மாதம் உயிரிழந்து அடக்கம் செய்யப்பட்ட – பெண்ணொருவருடைய தலையென அது இனங்காணப்பட்டுள்ளதாகவும் – பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# யாழ்ப்பாணம் – குறிகட்டுவான் பாதையை வெசாக்கை காட்டியாவது சீர்செய்யுங்கள்!

## அமைச்சர் கப்ராலிடம் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை கோரிக்கை



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,பெப்.27

வெசாக் பண்டிகை நயினாதீவில் கொண்டாடப்படும் நிலைமையில் யாழ்ப்பாணம் – குறிகட்டுவான் பாதையை சீரமையுங்கள் என நிதி மூலதன மற்றும் சந்தை, அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு அமைச்சின் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ராலிடம்பேராசிரியர்பாலசுந்தரம்பிள்ளைகோரிக்கை விடுத்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்திற்கு இன்றைய தினம் விஜயம் மேற்கொண்டிருந்தபோதே அமைச்சரிடம் இந்தக் கோரிக்கை பேராசிரியரால் முன்வைக்கப்பட்டது.

இதன்போது மேலும் பேராசிரியர் தெரிவித்தமை வருமாறு:–

யாழ்.பல்கலைக்கழகத்தின் வளாகங்களில் சில கட்டட தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளன. இதில் பொறியியல் பீடம், சித்த மருத்துவபீடம், மருத்துவபீடத்தின் சில கட்டடத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாமலும் உள்ளன. அத்தோடு இதற்கு பெருமளவு நிதி முதலீடுகளும் தேவைப்படுகின்றன. அவற்றை மிக விரைவில் பெற்றுத் தர வேண்டும்.

இந்த ஆண்டு தேசிய வெசாக் தினம் யாழ். நயினாதீவிலுள்ள நாக விகாரையில் கொண்டாடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் யாழிலிருந்து குறிகாட்டுவான் வரையான பாதை

மிகவும் மோசமாக – பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் – காணப்படுகின்றது. நீண்ட காலமாக இந்தப் பாதையை சுற்றுலாப் பயணிகளும் தென்னிலங்கை மக்களும் பயன்படுத்துகின்றபோதும் அது இன்னும் சீர் செய்யப்படவில்லை.

இதேபோன்று காரைநகர் – யாழ்ப்பாணம் பாதையும் தினமும் பல ஆயிரக்கணக்கான மக்கள் பயன்படுத்துகின்ற பாதையாக உள்ள போதும் அது சீரமைக்கப்படாமை மிகவும் வருத்தம் அளிக்கின்றது.

அத்தோடு குடா நாட்டை பொறுத்தவரை இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற

வெங்காயம், மிளகாய் போன்ற உற்பத்தி பொருள்களுக்கு தரமான விலையைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அதற்காக தென்னிலங்கை மற்றும் வட பகுதிக்கு இடையில் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்த உற்பத்தி பொருள்களின் விலை நிர்ணயம் தொடர்பில் முன்னெடுக்கப்பட வேண்டும் .

இதேநேரம் வடக்கில ஆடு வளர்ப்புத் தொடர்பில் அரசாங்கம் உரிய கரிசனை செலுத்த வேண்டும். ஏனெனில் வடக்கு மாகாணத்தில் உள்ள ஆட்டு இறைச்சியைப் போல இலங்கையில் எந்த பாகத்திலும் ஆட்டிறைச்சி சுவையானதாக இல்லை. எனவே வடக்கு மாகாணத்தில் ஆடு வளர்ப்பு தொடர்பில் அரசாங்கம் அதிக அக்கறை செலுத்து தற்குரிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். – எனவும் தெரிவித்தார்.

# அரச பின்வரிசை எம்.பிக்கள் பஸிலைச் சந்தித்துப் பேச்சு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரான, முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கும், ஆளும் தரப்பின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அளவில் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர் என அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கட்சியினதும், அரசாங்கத்தினதும் அடுத்தக்கட்ட நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஆசியாவின் முதலாவது பணக்காரர் ரிலையன்ஸ் அதிபர் முகேஷ் அம்பானி



ஆசியாவின் முதலாவது பணக்காரர் என்ற இடத்தை ரிலையன்ஸ் அதிபர் முகேஷ் அம்பானிமீண்டும்பிடித்துள்ளார்.

இது வரை இந்த இடத்தில் இருந்த சீனாவின் நீர்ப்போத்தல் வர்த்தகர் ஜோங் ஷான்சானுக்கு இந்த வாரம் 20 சதவிகித வர்த்தக இழப்பு ஏற்பட்டது.

இதனால் அவரது சொத்து மதிப்பில் சுமார் ஒரு லட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபா குறைந்து, நிகர சொத்து மதிப்பு 5 லட்சத்து 59 ஆயிரம் கோடியாக சரிந்தது.

இதனால், 5 லட்சத்து 84 ஆயிரம் கோடி சொத்து மதிப்புள்ள அம்பானி முதல் இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

# பாலஸ்தீனத்துக்கு கொரோனா தடுப்பு மருந்து அடுத்தவரமளவில் இந்தியா அனுப்பி வைக்கும்

## ஐ.நா. சபையில் இந்தியத் தூதர் உறுதி



பலஸ்தீனத்துக்கு கொரோனா தடுப்பு மருந்துகள் வழங்குவதை இஸ்ரேல்தடுப்பதாகக்கூறப்படும்நிலையில், விரைவில் அனுப்பி வைக்க இந்தியா ஏற்பாடு செய்யும் என இந்தியா உறுதியளித்துள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் பேசிய இந்தியத் தூதர் நாகராஜ் நாயுடு, இதனை தெரிவித்தார்.

இரண்டாம் தொகுப்பு மருந்துகளை நன்கொடையாக வரும் வாரங்களில் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தொற்றுநோயின் தாக்கத்தைத் தணிக்கத்தடுப்புமருந்துகள்கிடைப்பதில் உலக நாடுகளிடையே சமத்துவம் வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# 19 செயற்கை கோள்களுடன் நாளை விண்ணில் பாய்கிறது பி.எஸ்.எல்.வி. சி – 51 ராக்கெட்: இஸ்ரோ தலைவர் சிவன்



பி.எஸ்.எல்.வி.சி – 51 ரொக்கெட்டை விண்ணில் செலுத்துவதற்கான 25 மணி 30 நிமிட கவுண்ட் டவுன் இன்று காலை 8.54 மணிக்கு தொடங்கியது.

637 கிலோ எடை கொண்ட அமேசானியா செயற்கைகோள் உட்பட 19 செயற்கைக் கோள்களுடன் பி.எஸ்.எல்.வி.சி – 51 ரொக்கெட் நாளை விண்ணில் செலுத்தப்படவுள்ளது.

ரொக்கெட்டுக்கான எரிபொருள் நிரப்பும் பணி முடிவடைந்துள்ள நிலையில், இறுதிகட்ட பணிகளில் இஸ்ரோ விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதனிடையே, செயற்கைகோள்கள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட வேண்டி, இஸ்ரோ தலைவர் சிவன், திருப்பதி ஏழுமலையான் கோயிலில் சுவாமி தரிசனம் செய்தார்.

# சட்டசபை தேர்தல் தொகுதி பங்கீடு: அ.தி.மு.க. - பா.ம.க. இன்று மாலை பேச்சு

சட்டசபைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் வருகிற 12 ஆம் திகதி தொடங்குகிறது. மார்ச் 19 ஆம் திகதி மனுத்தாக்கலுக்கு கடைசி நாளாகும்.

ஏப்ரல் 6 ஆம் திகதி வாக்குப்பதிவு முடிந்த பிறகு மே மாதம் 2 ஆம் திகதி ஓட்டுகள் எண்ணி முடிவுகள் அறிவிக்கப்படும். எனவே தேர்தல் முடிவை தெரிந்து கொள்ள தமிழக மக்கள் வாக்களித்து விட்டு 27 நாள்கள் காத்திருக்க வேண்டும்.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டு விட்டதால் அரசியல் கட்சிகள் கூட்டணிகளை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி உள்ளன. மேலும் அனைத்து கட்சிகளும் தொகுதிப் பங்கீடு தொடர்பான பேச்சுக்களை விரைந்து முடிக்க திட்டமிட்டுள்ளன.

அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜனதா, பா.ம.க., தே.மு. தி.க. ஆகிய கட்சிகள் இடம் பெற்றுள்ளன. இந்த கட்சிகளுடன் தொகுதிப் பங்கீடு தொடர்பாக ஏற்கனவே பேசிவந்தனர்.

இந்த நிலையில் அ.தி.மு.க.- பா.ஜனதா இடையே தொகுதிப் பங்கீடு பேச்சு இன்று (சனிக்கிழமை) நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக மத்திய மந்திரிகள் வி.கே. சிங், கின்ரெட்டி ஆகியோர் நேற்று இரவே சென்னை வந்தனர்.

இன்று காலை 8.30 மணியளவில் மத்திய மந்திரிகளுடன் தமிழக பா.ஜனதா பொறுப்பாளர்கள் சி.டி.ரவி, தமிழக பா.ஜனதா தலைவர் எல். முருகன் ஆகியோர் சென்னை கிரீன் வேஸ் சாலையில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி வீட்டுக்கு சென்றனர். அங்கு அவர்கள் எடப்பாடி பழனிசாமியை சந்தித்து பேசினார்கள். சுமார் 30 நிமிடங்கள் இந்த பேச்சு நீடித்தது.

அப்போது பா.ஜனதா செல்வாக்கான தொகுதிகளை குறிப்பிட்டு அந்த தொகுதிகளை ஒதுக்க வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளனர். குறிப்பாக கடந்த தேர்தலில் 2 ஆம் இடத்தை பிடித்த தொகுதிகள் 20 ஆயிரத்துக்கும் மேல் வாக்குகள்



பெற்றதொகுதிகளை பா.ஜனதாவுக்கு சாதகமான தொகுதியாக கூறி உள்ளனர்.

தாங்கள் விரும்பும் தொகுதிகள் விவரத்தை பா.ஜ.க. தலைவர்கள் பட்டியலாக தொகுத்து எடப்பாடி பழனிசாமியிடம் கொடுத்தனர்.

இந்தபேச்சுமுடிந்ததும் அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், துணை முதலமைச்சருமான ஓ.பன்னீர் செல்வத்தை பா.ஜ.க. தலைவர்கள் சந்தித்து பேசினார்கள்.

இதுபற்றி பா.ஜனதா நிர்வாகிகள் கூறும்போது, இது முதற்கட்ட பேச்சு தான். விரைவில் தொகுதி உடன்பாடு ஏற்படும். 22 முதல் 25 தொகுதிகள் வரை பா.ஜனதாவுக்கு ஒதுக்க வாய்ப்பு உள்ளது என்றனர்.

பா.ஜனதாவை தொடர்ந்து பா.ம.க.வுடனும் அ.தி.மு.க. தலைவர்கள் தொகுதிப் பங்கீடு குறித்து பேசுகின்றனர். இன்று மாலை 4 மணியளவில் எம்.ஆர்.சி. நகரில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோரை பா.ம.க. தலைவர்கள் சந்திக்கிறார்கள்.

பா.ம.க. சார்பில் இளைஞர் அணி தலைவர் டாக்டர் அன்புமணி, பா.ம.க. மாநிலதலைவர் ஜி.கே.மணி, தன்ராஜ் ஆகியோர் செல்ல இருப்பதாக கூறப்படுகிறது.

பா.ம.க. கடந்த தேர்தலில் 31 தொகுதிகளில் போட்டியிட்டது. எனவே அதே எண்ணிக்கையில் தொகுதிகள் வேண்டும் என்று வலியுறுத்தி வந்தனர். அதே நேரம் பா.ம.க.வின் மிக முக்கிய கோரிக்கையான வன்னியர்களுக்கு தனி இட ஒதுக்கீடு கோரிக்கையை ஏற்று மிகவும் பிற்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டில் வன்னியர்களுக்கு 10.5 சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்படும் என்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அறிவித்தார்.

இதற்கு டாக்டர் ராமதாஸ் வரவேற்பு தெரிவித்துள்ளார். இந்த கோரிக்கையை நிறைவேற்றி கொடுத்தமையால் தொகுதி ஒதுக்கீட்டு பிரச்சினையில் பா.ம.க. தனது பிடிவாதத்தை தளர்த்தும் என்று கூறப்படுகிறது. எனவே பா.ம.கவுக்கும் 22 முதல் 25 தொகுதிகள் வரை ஒதுக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.

பா.ஜனதா, பா.மக.வை தொடர்ந்து தே.மு.தி.க.வுடன் தொகுதி பங்கீடு பேச்சு தொடங்கும் என்று இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இதுபற்றி தே.மு.தி.க. நிர்வாகிகளிடம் கேட்டபோது அ.தி.மு.க.விடம் இருந்து இன்னும் அழைப்பு வரவில்லை. அழைத்ததும் பேச்சுக்கு செல்வோம் என்றனர்.

மேலும் முக்குலத்தோர் புலிப்படை கட்சி தலைவர் நடிகர் கருணாஸ், பெருந்தலைவர் மக்கள் கட்சி தலைவர் என்.ஆர்.தனபாலன், புதிய நீதி கட்சித் தலைவர் ஏ.சி.சண்முகம், இந்திய குடியரசு கட்சி தலைவர் செ.கு.தமிழரசன் உள்ளிட்ட சிறிய கட்சிகளுடனும் பேச்சு தொடர்ந்து நடைபெற உள்ளது.

இதற்கிடையில் விழுப்புரத்தில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும் பா.ஜனதா மையக்குழு கூட்டத்தில் கலந்து கொள்ள இருக்கும் அமித்ஷா இன்று இரவே சென்னை வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சென்னையில் அவரை முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் சந்தித்து பேச உள்ளனர். இந்த சந்திப்பின்போது பா.ஜனதாவுக்கான தொகுதிகள் உறுதி செய்யப்படலாம் என்று கூறப்படுகிறது.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டதும் தொகுதிப் பங்கீடு பேச்சு சூடு பிடித்து இருப்பதால் தேர்தல் களம் பரபரப்பாகி உள்ளது.

# வெளிநாட்டு பொம்மை மோகத்தை குறைக்க வேண்டும் - பிரதமர் மோடி

இந்தியாவில் பொம்மை தயாரிப்பது ஒரு தொழில் வாய்ப்பு மட்டுமின்றி, நூற்றாண்டு பழைமையான பாரம்பரியத்தை வலுப்படுத்தும் செயலுமாகும் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

டெல்லியில், இந்திய பொம்மை கண்காட்சியை காணொலியில் தொடங்கிவைத்து மோடி பேசினார்.



இந்திய கோவில்களில் காணப்படும் சிற்பங்கள் இந்தியாவின் பாரம்பரியமிக்க பொம்மை தயாரிக்கும் திறனுக்கு சான்றாக திகழ்கின்றன என மோடி குறிப்பிட்டார்.

குழந்தைகளின் ஒட்டு மொத்த வளர்ச்சியை மனதில் கொண்டு பொம்மைகளை தயாரிக்குமாறு உற்பத்தியாளர்களை மோடி கேட்டுக் கொண்டார்.

பொம்மைகள் குழந்தைகளிடம் அறிவியல் ஆர்வத்தை வளர்க்கும் விதத்தில் இருக்க வேண்டும் என மோடி அறிவுறுத்தினார்.

வெளிநாட்டு பொம்மைகள் குழந்தைகளிடம் பிரபலமாக இருப்பதை சுட்டிக்காட்டிய மோடி, 70 ஆண்டுகளாக இந்திய பொம்மை படைப்பாளிகள் புறக்கணிக்கப்பட்டு வருவதாக மோடி கவலை தெரிவித்தார்.

# பெண் ஊழியர்களால் தயாரிக்கப்பட்ட எம்.ஜி.மோட்டார் நிறுவனத்தின் 50,000ஆவது ஹெக்டார் கார்..!




எம்.ஜி. மோட்டார் நிறுவனம் முதன் முறையாக முழுவதும் பெண் ஊழியர்களைக் கொண்டு ஒரு காரைத் தயாரித்து சாதனை படைத்துள்ளது.

பணியிடங்களில் பாலினச் சமத்துவத்தைப் பேணும் வகையில் பணியாளர் எண்ணிக்கையில் பாதிக்குப் பாதி பெண்களைக் கொண்டுவருவதை நோக்கமாகக் கொண்டு இந்நிறுவனர் செயற்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக ஹெக்டார் வகையைச் சேர்ந்த ஐம்பதாயிரமாவது காரை குஜராத்தில் உள்ள ஆலையில் முழுவதும் பெண் ஊழியர்களைக் கொண்டே தயாரித்துள்ளது.

எம்.ஜி. மோட்டார் நிறுவனத்தின் இந்தச் சாதனை வாகனத் தயாரிப்புத் தொழிலில் அதிக எண்ணிக்கையில் பெண் தொழிலாளர்கள் சேர்வதற்கு ஓர் உந்துதலாக அமையும் என நிறுவனத்தின் தலைவரும் மேலாண் இயக்குநருமான ராஜீவ் சபா தெரிவித்துள்ளார்.

# மியன்மாரில் நிலவும் சூழலை உன்னிப்பாக கண்காணித்து வருகிறோம்; ஐ.நாவில் இந்தியா

மியன்மாரில் ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை இராணுவம் கடந்த 1 ஆம் திகதி கவிழ்த்துவிட்டு ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியது. மேலும், அந்த நாட்டின் தலைவர் ஆங் சான் சூகி, அதிபர் வின் மைன்ட் உள்ளிட்ட முக்கிய அரசியல் தலைவர்களை கைது செய்து தடுப்புக் காவலில் வைத்துள்ளது.

மியன்மார் இராணுவத்தின் இந்த நடவடிக்கைக்கு உலகின் பெரும்பாலான நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்தன. குறிப்பாக அமெரிக்கா, மியன்மார் ராணுவத்தை வன்மையாக கண்டித்ததோடு மட்டுமல்லாமல் ராணுவ தலைவர்கள் மீது பொருளாதார தடைகளையும்



விதித்தது.

இதற்கிடையே, மியன்மாரில் ராணுவ ஆட்சிக்கு எதிரான மக்களின் போராட்டம் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகிறது. அதேசமயம் மியன்மார் ராணுவம் இந்தப் போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்க முயற்சித்து வருகிறது.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் அவையில் மியன்மார் விவகாரம் குறித்து இந்தியாவுக்கான நிரந்தர தூதர் டிஎஸ் திருமூர்த்தி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

மியன்மாரில் சமீப காலங்களில் ஏற்படும் நிலவரங்களை இந்தியா உன்னிப்பாகக் கண்காணித்து வருகிறது. தங்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை அமைதியான மற்றும் ஆக்கப்பூர்வமான முறையில் மியான்மர் தலைமை தீர்த்துக்கொள்ள வேண்டும். மியன்மாருடன் இந்தியா நில மற்றும் கடற்பரப்பை பகிர்ந்து கொள்கிறது.

எனவே, அமைதி மற்றும் ஸ்திரத் தன்மையை உறுதி செய்வதில் நேரடி பங்கு உள்ளது. மியன்மாருக்கும் அந் நாட்டுக்கு மக்களுக்கும் இந்தியா நெருங்கிய நண்பராக உள்ளது.

அங்குள்ள சூழலை தொடர்ந்து உன்னிப்பாக கவனித்து வருவதோடு ஒத்த கருத்துடைய நாடுகளிடம் இதுகுறித்து தொடர்ந்து ஆலோசிப்போம். அப்போது தான், மக்களின் நம்பிக்கை மற்றும் விருப்பங்கள் மதிக்கப்படும் என தெரிவித்தார்.

# ஜமால் கஷோகி கொலை செய்ய சவுதி இளவரசரே உத்தரவிட்டார்

## அமெரிக்காவின் புலனாய்வு அறிக்கை



சவுதி அரேபியாவை சேர்ந்த பத்திரிகையாளர் ஜமால் கஷோகி, அமெரிக்காவில் வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகையில் சவுதி அரசையும், மன்னர் மற்றும் பட்டத்து இளவரசரையும் விமர்சித்து கட்டுரை எழுதி வந்தார்.

இந்த நிலையில் துருக்கி பெண் ஒருவரை ஜமால் கஷோகி திருமணம் செய்ய முடிவு செய்தார். இதற்காக கடந்த 2018 ஆம் ஆண்டு துருக்கி இஸ்தான்புல் நகரில் உள்ள சவுதி தூதரக அலுவலகத்துக்கு ஆவணங்களை பெறுவதற்காக சென்றார்.

அப்போது அவர் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டார். இந்த கொலையை சவுதி அரேபியா அரசு தான் திட்டமிட்டு செய்ததாக துருக்கி குற்றம்சாட்டியது. வீடியோ மற்றும் ஆடியோ ஆதாரங்களையும் வெளியிட்டது.

மேலும் ஜமால் கஷோகி கொலைக்கு சவுதி இளவரசர் முகமது பின்சல்மான் உத்தரவிட்டார் என்றும் துருக்கி தெரிவித்திருந்தது.

இந்த நிலையில் பத்திரிகையாளர் ஜமால் கஷோகி கொலை தொடர்பாக அமெரிக்க புலனாய்வுத்துறை அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில் ஜமால் கரோகி கொலை சவுதி இளவரசர் உத்தரவோடு தான் நடந்திருக்கிறது என்று கூறி இருக்கிறது.

ஜமால் கஷோகியை சூழ்ச்சி செய்யப்பட்டு இஸ்தான் புலுக்கு வரவழைக்கப்பட்டார். துருக்கியில் உள்ள சவுதி அரேபியா தூதரகத்துக்குள் சென்ற அவர் திரும்பி வரவில்லை. அங்கு அவரை படுகொலை செய்து அவரது உடலை துண்டு துண்டாக வெட்டி உள்ளனர். பின்னர் உடல் பாகங்களை ஆசிட்டை ஊற்றி அழித்துள்ளனர்.

இந்த கொடூர செயலுக்கு கண்டிப்பாக முகமது பின்சல்மான் சம்மதித்து உத்தரவிட்டுள்ளார். ஜமால் கஷோகியை பிடிக்க வேண்டும் அல்லது கொலை செய்யும் திட்டத்துக்கு அவர் ஒப்புதல் அளித்துள்ளார்.

கொலை நடந்த முறையே சவுதி இளவரசர் பின்னணியை உணர்த்துகிறது என்று அமெரிக்க புலனாய்வு தெரிவித்துள்ளது. அமெரிக்காவின் இந்த குற்றச்சாட்டை சவுதி அரேபிய அரசு திட்டவட்டமாக மறுத்துள்ளது.

ஜமால் கஷோகி கொலை தொடர்பாக அமெரிக்கா எதிர்மறையான போலியான ஏற்கமுடியாத அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதில் தவறான தகவல்கள் இடம்பெற்றுள்ளன. அந்த அறிக்கையின் முடிவும் ஏற்கத்தக்கது அல்ல என்று தெரிவித்துள்ளது.

இதற்கிடையே சவுதி அரேபியாவைச் சேர்ந்த 76 தனி நபர்களுக்கு எதிராக அமெரிக்கா விசா கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

# சவுதியில் 76 பேருக்கு விஸா கட்டுப்பாடு

## அமெரிக்கா விதித்தது



சவுதி அரேபியாவைச் சேர்ந்த பத்திரிகையாளர் ஜமால் கஷோகி, அமெரிக்காவின் பிரபல பத்திரிகையில் சவுதி அரசின் கொள்கைகளுக்கு எதிராகவும், பட்டத்து இளவரசருக்கு எதிராகவும் கட்டுரைகளை எழுதி வந்தார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் துருக்கியின் இஸ்தான்புல் நகரில் உள்ள சவுதி அரேபியாவின் தூதரகத்துக்கு சென்ற ஜமால் படுகொலை செய்யப்பட்டார். சவுதி அரேபியா அரசு தான் இந்த கொலையைத் திட்டமிட்டு நிகழ்த்தியதாக துருக்கி திட்டவட்டமாகக் கூறியதுடன் இதற்கான வீடியோ மற்றும் ஆடியோ ஆதாரத்தை வெளியிட்டது. உலக அளவில் இந்த விவகாரம் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், வெளிநாடுகளில் உள்ள அதிருப்தியாளர்களை அச்சுறுத்துவதாக கூறி சவுதி அரேபியாவைச் சேர்ந்த 76 தனிநபர்களுக்கு எதிராக அமெரிக்கா விசா கட்டுப்பாடுக்களை விதித்துள்ளது.

ஜமால்கஷோகியைபிடிக்கவோ அல்லது கொல்லப்படவோ எடுக்கப்பட்ட ஆபரேன் இஸ்தான்புல் என்பதற்கு சவுதி பட்டத்து இளவரசர் முகம்மது பின் சல்மான் ஒப்புதல் அளித்திருக்க அதிகபட்ச வாய்ப்புகள் உள்ளதாக அமெரிக்காவின் உளவுத்துறை அறிக்கை வெளியான சிறிது நேரத்திலேயே விசா தடை குறித்த அறிவிப்பு வெளியானது.

இதுதொடர்பாக, அமெரிக்க வெளியுறவுத்துறை செயலர் ஆண்டனி பிளின்கென் வெளியிட்டுள்ள அறிக்கையில் எதிர்க்கருத்துக்கள் உடையவர்கள், ஆர்வலர்கள், பத்திரிகையாளர்களை அச்சுறுத்துதல் போன்றவை கண்டிப்பாக நிறுத்தப்பட வேண்டும். இது போன்ற செயல்கள் அமெரிக்காவால் சகித்துக் கொள்ளப்பட மாட்டாது என ஜோ பைடன் உறுதிபட தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டார்.

# சவுதி மன்னர் சல்மானுடன் ஜோ பைடன் உரையாடல்



அமெரிக்காவின் 46 ஆவது அதிபராக ஜோ பைடன் கடந்த மாதம் 20 ஆம் திகதி பதவி ஏற்றார். இதையடுத்து அவர் உலக நாடுகளின் தலைவர்கள் ஒவ்வொருவரையும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசி வருகிறார்.

இதுவரை சீன அதிபர் ஜின்பிங், ரஷ்ய அதிபர் புடின், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உள்ளிட்டோருடன் தொலைபேசி வாயிலாக பேச்சு நடத்தியுள்ளார்.

இந்நிலையில், சவுதி அரேபியாவின் மன்னர் சல்மானிடம் ஜோ பைடன் நேற்று தொலைபேசியில் உரையாடினார். இரு நாட்டுத் தலைவர்களும், தங்கள் நாடுகளுக்கு இடையிலான உறவு குறித்தும், சவுதி அரேபியாவுக்கு ஈரானிய ஆதரவு பயங்கரவாத குழுக்களால் நிலவும் அச்சுறுத்தல் குறித்தும் விவாதித்தனர்.

# தடுப்பூசி போட்டதால் எந்த பாதிப்பும் இல்லை இங்கிலாந்து அரசியார் எலிசபெத் சொல்கிறார்

இங்கிலாந்து நாட்டின் அரசி இரண்டாம் எலிசபெத் தனது 94 வயதான கணவர் பிலிப்புடன் சென்று கடந்த ஜனவரி மாதம் கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்டார்.

இவரது மூத்த மகனும் வாரிசுமான இளவரசர் சார்லஸ், அவரது மனைவி கமிலா ஆகியோரும் தடுப்பூசி போட்டுக் கொண்டனர். தற்போது இங்கிலாந்தில் தடுப்பூசி போடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

தடுப்பூசி போட்டுக் கொண்டது குறித்து இங்கிலாந்து அரசி இரண்டாம் எலிசபெத் கூறியதாவது:-

கொரோனாத் தடுப்பூசி போட்டுக் கொண்டேன். அதனால் எனக்கு சிறிய பிரச்சினை கூட ஏற்படவில்லை. தடுப்பூசி போடுவது குறித்து தயக்கம் கொள்பவர்கள் இதுபற்றி சிந்திக்க வேண்டும். தடுப்பூசி போட்டுக் கொள்வது மிகவும் எளிது என்று அதைப் போட்டுக் கொண்டவர்களிடம் இருந்து ஏராளமான கடிதங்கள் வந்துள்ளன.

தடுப்பூசி போட்டுக்கொள்பவர்கள் நிச்சயம் பாதுகாப்பு பெறுவார்கள். தடுப்பூசி போடவில்லை என்றால் அந்த பாதுகாப்பை பெற முடியாது.

எனவே மக்கள் அனைவரும் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டியது அவசியம். தடுப்பூசி போட்டுக் கொண்டால் பாதுகாக்கப்பட்ட உணர்வு ஏற்படும். தடுப்பூசி போடும் திட்டத்தை நான் முழுமையாக வரவேற்கிறேன்.

- இவ்வாறு அவர் கூறினார்.

இங்கிலாந்து மன்னர் பிலிப்பும் தடுப்பூசி போடுவதன்



அவசியத்தை தெரிவித்துள்ளார். இது ஒரு சிறப்பான பணி என்று சுகாதாரத்துறை தலைவரிடம் கூறினார். இது ஒரு ஊக்கமளிக்கும் செயல். இரண்டாம் உலகப் போரின் போது ஏராளமானோர் உயிரிழந்தார்கள். அதுபோல் கொரோனா தாக்குதல் நடந்துள்ளது.

அதை வெல்ல தடுப்பூசி அவசியம். இதற்கு அனைவரும் ஆதரவு தெரிவிக்க வேண்டும் என்று கூறியுள்ளார். தற்போது 94 வயதான இங்கிலாந்து அரசர் பிலிப் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். என்றாலும் அவருக்கு கொரோனாத் தொற்று இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இறுதியிலாவது அரசாங்கம் இணக்கம் தெரிவித்தமை நிம்மதியாக இருக்கின்றது



## ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 27

கொரோனா வைரஸ் தொற்றினால் மரணித்தவர்களின் உடல்களை நல்லடக்கம் செய்வதனை நீண்டகாலமாக இழுத்தடித்துவிட்டு, இறுதியில் அரசாங்கம் அதற்கு இணக்கம் தெரிவித்திருப்பதையிட்டு நிம்மதியடைகின்றோம் என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸ் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே ரவூப் ஹக்கீம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். குறித்த அறிக்கையில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

இந்த விடயம் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் உள்வாங்கப்பட்டிராது விட்டிருந்தால், அவ்வாறே உறுப்பு நாடுகள் சிலவற்றால் இலங்கை மீது கொண்டுவரப்பட்ட பிரேரணையில் சேர்க்கப்படாது விட்டிருந்தால் வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்ட, மக்களின் ஒரு சாராரை மனவேதனைக்குள்ளாக்கிய இத்தகைய எரியூட்டும் அவலத்திற்கு தீர்வு கிட்டியிருக்க மாட்டாது.

அமர்வின் ஆரம்பத்திலேயே இஸ்லாமிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் குரல் எழுப்பியதன் பயனாகவும் அநேகமான மேற்குலக நாடுகள் கருத்துப் பரிமாற்றங்கள் நடத்தி கண்டன எதிர்ப்பலைகளைத் தோற்றுவித்ததன் விளைவாகவும் பெப்ரவரி 25 ஆம் திகதி, ஐ.நா.மனித உரிமைகள் பேரவை அதன் செயற்பாட்டைத் தீவிரப்படுத்தியது.

தனிப்பட்ட நாடுகள் ஒவ்வொன்றினதும் மனித உரிமை மீறல்களை கண்காணிக்கின்ற விடயத்தில் ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பங்களிப்பை யாரும் குறைத்து மதிப்பிடமுடியாது.

மனித உரிமைகள் நிகழ்ச்சி நிரலில் எங்கள் நாடும் ஓர் அங்கம் என்ற வகையில் ஐ.நா.மனித உரிமைப் பேரவையின் செயற்பாடுகளைப் பொறுத்தவரை முன்வைக்கப்படும் அறிக்கைகள் மீது கரிசனை செலுத்தி அவற்றை அணுக வேண்டும்.

நாங்கள் சந்தித்த எமது தலைநகரிலிருந்து இராஜதந்திர முன்னெடுப்புகளை மேற்கொண்டுவரும் வெளிநாட்டு முக்கியஸ்தர்களும் மற்றும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் கலந்துகொள்ளும் சர்வதேசப் பிரமுகர்கள் பலரும் எங்களது கோரிக்கையின் நியாயத்தைப் புரிந்துகொண்டதோடு,ஒத்துழைப்பு நல்குவதாக உறுதிமொழியும் அளித்திருந்ததற்கு நாங்கள் நன்றி தெரிவிக்கின்றோம்.

அத்துடன் இந்த விடயத்தில் எங்களது இழந்த உரிமையை மீளப் பெறுவதற்கு உதவிய பல்வேறு அரசியல் கட்சிகள் குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ் முற்போக்குக் கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் மற்றும் ஏராளமான சிவில் சமூக அமைப்புக்கள், உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்கள் என்பன தனியாகவும் கூட்டாகவும் இதற்காகக் குரல் கொடுத்ததை நன்றியறிதலோடு நினைவு கூர்கின்றோம்.

இந்த விவகாரத்தில் வெளிநாட்டு அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு நாடுகளை ஒன்றிணைத்துச் செயற்படும் இஸ்லாமிய நாடுகளின் ஒன்றியம் போன்றவற்றின் அழுத்தம் கடந்த சில மாதங்களாக சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டு வந்தன.

காணாமல் போனோரின் குடும்பத்தினர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் பல்லாண்டு காலமாக ஈடுபட்டுவருகின்றமையால், ஜனாதிபதி அவர்களின் குடும்பத்தினரைக் கண்டு கதைப்பதற்கு முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால், அது அவர்களின் துன்பியல் வாழ்வில் அது ஒரு சிறிய முன்னெடுப்பு மட்டுமே.

ஐ.நா. மனித உரிமை பேரவையின் அறிக்கையில் குறிப்பிடப்படும் ஏனைய விடயங்கள் அனைத்தின் மீதும் அரசாங்கம் உரிய கவனஞ் செலுத்தி, ஆக்கபூர்வமான பங்களிப்புக்களைச் செய்து அதனது நிலைப்பாட்டை மீளாய்வுக்குட்படுத்தி, உள்ளக விவகாரங்களில் மறுப்புக் கூறுவதிலேயே காலத்தைக் கடத்தாது. பொறுப்புக்கூறல், நீதி மற்றும் நல்லிணக்கச் செயற்பாடுகளில் நாட்டம் செலுத்த வேண்டும் என அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# நான் புத்தியற்றவன் அல்லன் - அலி சப்ரி

சிங்கள பௌத்த மக்களுக்கு எதிராக தன்னால் புதிய சட்டங்களை உருவாக்க முடியாது என்றும் ,அது போன்ற கருத்துகளை தெரிவிக்கும் அளவுக்கு தான் புத்தியற்றவர் கிடையாது என்று நீதி அமைச்சர் அலிசப்ரி தெரிவித்தார்.

நீதி அமைச்சில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது -

இலங்கையில் 2019 ஆம் ஆண்டின் இறுதிகாலப்பகுதில் 7 லட்சத்து 50 ஆயிரம் வழக்குகள் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றுள் உயர் நீதிமன்றத்தில் இடம்பெற்று வரும் 50 ஆயிரம் வழக்குகள் தொடர்பான விசாரணைகள் 20 வருடகாலமாக இடம்பெற்று வருகின்றன. வளர்ச்சியடைந்த நாடுகளை பொறுத்தமட்டில் 10 இலட்சம் மக்களுக்கு எத்தனை நீதிபதிகள் இருக்க வேண்டும் என்று சட்டவிதிகள் காணப்படுகின்றன. இலங்கையை பொறுத்த மட்டில் அவ்வாறான நிலைமை இல்லாததுடன், இங்கு 15 நீதிபதிகளே காணப்படுகின்றனர். இதனை மாற்றி அமைக்க வேண்டும். அதேவேளை நீதி மன்றங்களில் விசாரணைக்குட்படுத்தி வரும் வழக்குகளின் எண்ணிக்கையை குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வழக்கு விசாரணைகளை கட்டுப்படுத்துவதற்காக தொழில்நுட்பமும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. சிறையிலிருந்து நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்ல முடியாதவர்களை இணையவாயிலாக தொடர்பு கொண்டு வழக்கு விசாரணைகளை முன்னெடுக்கும் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றது. இதேவேளை புதிய அரசமைப்பு திருத்தமொன்றை அமைப்பது தொடர்பிலும் தற்போது ஆராயப்பட்டு வருகின்றது. இதன்போது வணிக சட்டம், சிவில் சட்டம் மற்றும் குற்றவியல் சட்டம் தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்காக விசேட நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாடாளுமன்ற கூட்டத்தொடரில் என்னால் தெரிவிக்கப்பட்ட கருத்துத் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தினதேரரால் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதில் தெரிவிக்கும் வகையிலேயே நான் அன்று கருத்து தெரிவித்திருந்தேன். இதன்போது ரத்தினதேரர் 'ஒரே நாடு - 'ஒரே சட்டம் என்பது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதான தேர்தல் பிரசாரமாகும்' - என்று குறிப்பிட்டு, தனியார் சட்டங்களை மாற்றி அமைப்பது தொடர்பில் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளிக்கும் முகமாகவே தனியார் சட்டங்கள் என்பது முஸ்லிம் இனத்துடன் மாத்திரம் தொடர்பு கொண்டதல்ல , நாட்டிலுள்ள அனைத்து இனங்களுக்கும் தனித்தனியான சட்டங்கள் உள்ளன. அவை அனைத்தையும் மாற்றி அமைப்பது என்றால் அது தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்த வேண்டும் என்று அவருக்கான பதிலை வழங்கியிருந்தேன்.

இத்தகைய கருத்தை தெரிவித்ததாக என்னை பலரும் விமர்சித்திருந்தனர். சிங்கள பௌத்த மக்களுக்கு எதிராக என்னால் சட்டங்கள் உருவாக்க முடியாது. அவ்வாறான எண்ணத்தில் எந்தவித கருத்தையும் நான் தெரிவிக்கவில்லை. இது தொடர்பில் பௌத்தமத தலைவர்களுக்கு பலமுறை தெளிவுபடுத்தியுள்ளேன். இது தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்தவும் நான் தயாராகவே உள்ளேன். எந்தவொரு சட்டத்தை உருவாக்குவதென்றாலும் அது தொடர்பில் அமைச்சரவையில் அனுமதி பெறவேண்டியது கட்டாயமாகும்.

இந்நிலையில் முஸ்லிம் சட்டவிதிகள் சிலவற்றில் திருத்தம் மேற்கொள்ள நாம் அமைச்சரவையில் அனுமதி பெற்றுக் கொண்டுள்ளோம்.அதற்கமைய முஸ்லிம் ஆண்களுக்கு நிகரான முஸ்லிம் பெண்களுக்கு சமவுரிமை வழங்கல், 18 வயதுக்கு பின்னரே முஸ்லிம் பெண்கள் திருமணம் செய்யவேண்டும், பொது இடங்களில் முகத்தை மறைக்கும் வகையில் ஆடை அணியக்கூடாது போன்ற திருத்தங்கள் அதில் உள்ளடங்குகின்றன.

# குண்டுத் தாக்குதல் அறிக்கை; ஆளும் கட்சிக்குள் முரண்பாடு!

## அமைச்சர் வாசுதேவவும் போர்க்கொடி



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை முழுமையற்றதாகும்.

2019 ஜனாதிபதித் தேர்தல் சதி, எம்.சி.சி. ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கான முயற்சி உள்ளிட்ட காரணிகளும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் தாக்கம் செலுத்துகின்றனவா என்பது தொடர்பான எந்தவொரு விடயமும் குறித்த அறிக்கையில் உள்ளடக்கப்படாமையினாலேயே இதனை முழுமையற்ற அறிக்கையாகக் கருதுவதாக நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் தனது நிலைப்பாட்டை தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை முழுமையற்றதாகும்.

அதில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டிய பிரதான காரணி தொடர்பில் எதுவும் உள்ளடக்கப்படவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் எதிர்பார்க்கப்பட்ட பிறிதொரு விடயம் என்ன என்பதே இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டிய பிரதான காரணியாகும்.

அதாவது எம்.சி.சி. ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்காக, நடைபெறவிருந்த தேர்தலை நோக்காக உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் பிறிதொரு சிவில் கலவரத்தை உண்டாக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தனவா என்பது தொடர்பில் ஆராயப்பட்டிருக்க வேண்டும்.

சஹ்ரான் மற்றும் அவர் சார்ந்தவர்களுக்கு தற்கொலை குண்டு தாக்குதல்களை மேற்கொள்வது மாத்திரமே இலக்காக காணப்பட்டது.

ஆனால் அந்த தாக்குதலுடன் நாட்டிலுள்ள கத்தோலிக்க , சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் மத்தியில் பாரிய கலவரத்தை ஏற்படுத்தி அடுத்தடுத்த கட்டத்தில் என்ன நடக்கப்போகின்றது என்பதை சஹ்ரான் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

எனவே இது போன்ற விடயங்கள் தொடர்பில் இந்த அறிக்கையில் எதுவும் வெளிப்படுத்தப்படவில்லை. அதன் காரணமாகவே இதனை முழுமையற்ற அறிக்கையாக நாம் கருதுகின்றோம் என்றார்.

# ஹெரோயினுடன் பெண் ஒருவர் கைது

ஹெரோயின் மற்றும் ஐஸ் ரக போதைப்பொருளுடன் பெண் ஒருவர் உட்பட 4 பேர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று ராகமை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 750 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 15 லட்சத்திற்கும் அதிக பணத்துடன் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைவாக தெஹிவளை பிரதேசத்தில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதன்போது, குறித்த பெண்ணிடம் இருந்து ஒரு கிலோ கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டதாக அவர் தெரிவித்தார். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 27.02.2021இல் வெளியிடப்பெற்றது.